

திருப்பூர் மாநகராட்சியில், ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமை அமைச்சர், மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மத்திய மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், தெற்கு மாநகர செயலாளர் டிகேடி மு.நாகராசன், ஈ.தங்கராஜ், மோகனசுந்தரம், உள்பட அதிகாரிகள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### முனைவர் சி.பிரதீப் தலைமை ! ஜி.எஸ். செந்தில் முருகன் வரவேற்புரை!

# விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறியாளர் அணி ஒன்றிய,நகர, பேரூர் கழக நிர்வாகிகள் அறிமுக கூட்டம்!

## செஞ்சி கே.எஸ். மஸ்தான் - எஸ்.கே.பி கருணா சிறப்புரை!

விழுப்புரம் ஜூலை. 31-

விழுப்புரம் வடக்கு மாவட்ட கழக தி.மு.க. பொறியாளர் அணி ஒன்றிய,நகர,பேரூர் கழக நிர்வாகிகள் அறிமுக கூட்டம் 2.8. 2025 சனிக்கிழமை காலை 10 மணி அளவில் ஹோட்டல் ஆர்யாஸ் கார்டன் சென்னை நெடுஞ்சாலை திண்டி வனத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்துக்கு கழகப் பொறியாளர் அணி துணைச் செயலாளரும், பொறியாளர் அணி கடலூர் மண்டல பொறுப்பாளருமான முனைவர் சி.பிரதீப் தலைமை வகிக்கிறார்.

மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் ஜி. எஸ்.செந்தில் முருகன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

மாவட்டத் தலைவர் சி.சக்தி சரவணன், மாவட்ட துணைத் தலைவர் பி. ஏழுமலை,மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஜி. பி.எஸ்.முருகன்,ஜே. ரசூல் பாஷா,பி. சரவணன்,பி. சிவப்பிரகாசம்,ஜி. வெங்கடேசபெருமாள்,வி. மலையரசன்,ஜி. மோகன் தாஸ், கே. பிரபாகரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான்,கழக பொறியாளர் அணி மாநில தலைவர் எஸ். கே.பி.கருணா ஆகியோர் பங்கேற்று ஆலோசனை வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, ஒன்றிய,நகர, கழக செயலாளர்கள், நிர்வாகிகள்,மாவட்ட, ஒன்றிய,நகர, பேரூர் கழக பொறியாளர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொருள்: புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய,நகர, பேரூர் கழக பொறியாளர் அணி நிர்வாகிகள் அறிமுகம்.

முதல்வர் ஆணைப்படி ஓரணியில் தமிழ்நாடு கருத்தினை பொறியாளர் அணி சார்பில் முன்னெடுத்தல்.

விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள கிளைகள் தோறும் பொறியாளர் அணி உறுப்பினர்களை சேர்த்தல் மற்றும் கழக ஆக்கப் பணி.

திண்டிவனம் நகர பொறியாளர் அணி அமைப்பாளர் எம். வெங்கடேசன் நன்றி உரையாற்றுகிறார்.



ஈரோடு மாநகராட்சி 1 ஆம் மண்டலத்திற்குட்பட்ட 4வது வார்டில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாமில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு மனுக்களை வழங்கினார்கள். உடனடியாக தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கான சான்றிதழை மண்டலத் தலைவர் ப.க.பழனிச்சாமி முன்னிலையில் ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் வழங்கினார் . நிகழ்வில் மேயர் சு.நாகரத்தினம் உள்பட கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.

### 43 சேவைகளின் அரங்குகள் அமைக்கப்பட்டு

# திருச்சி உறையூரில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

## அமைச்சர் கே.என்.நேரு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்!

திருச்சி, ஜூலை, 31-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொதுமக்கள் நலன் பெறும் வகையில் தமிழக முழுவதும் ‘உங்களுடன் ஸ்டாலின்’ சிறப்பு முகாமினை நடத்துவது திட்டமிட்டு கடந்த 15. 07 .2025 அன்று கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் துவக்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து இந்த முகாம்கள் தமிழகம் முழுவதும் நாள்தோறும் நடைபெற்று வருகிறது . அதன் ஒரு பகுதியாக ‘உங்களுடன் ஸ்டாலின்’ சிறப்பு முகாம் திருச்சி உறையூர் வெக்காளியம்மன் கோவில் தெரு பகுதியில் நடைபெற்றது. இந்த முகாமில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு நேரில் ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களிடம் மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.

மேலும் பொதுமக்களிடம் பெறப்படும் கோரிக்கை மனுக்களை பதிவேற்றம் செய்வதையும் முகாமின் செயல்பாடுகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களுடன் கலந்துரையாடி பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

முகாமில் உள்ள 13 துறைகளின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, எரிசக்தி துறை, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சிறுபான்மையினர் நலத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவை துறை, சிறப்பு திட்ட செயலாக்கு துறை மற்றும் இலவச மருத்துவ முகாம் ஆகிய 43 சேவைகளின் அரங்குகள் அமைக்கப்பட்டு பொதுமக்களிடம் மனுக்கள் பதிவு செய்யப்பட்டது.

தொடர்ந்து பொதுமக்களிடம் கோரிக்கை மனு ககளையும் பெற்று அதிகாரிகளிடம் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் சரவணன், மாநகராட்சி மேயர் அன்பழகன், மாநகராட்சி ஆணையர் மதுபாலன், மாவட்ட நகர் ஊரமைப்பு குழு உறுப்பினர் வைரமணி, நகர பொறியாளர் சிவபாதம், பொதுச் செயலாளர் இளங்கோ உள்ளிட்ட மாமன்ற உறுப்பினர்கள் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

‘ஓரணியில் தமிழ்நாடு’ ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டமும் மக்களிடம் நல்ல வரவேற்பு பெற்றுள்ளது. ஆனால் அதை பார்த்து எடப்பாடி பழனிச்சாமிக்கு அச்சம் வந்துவிட்டது அதனால் அவர் அந்த திட்டங்களை விமர்சிக்கிறார் திருச்சியில் அமைச்சர் கே என் நேரு பேட்டி

திருச்சி மாநகரம் உறையூர் பகுதிக்குட்பட்ட எட்டு மற்றும் ஒன்பதாவது வார்டுகளில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் இன்று நடைபெற்றது இந்த முகாமை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருக்கு என் நேரு நேரில் பார்வையிட்டு மக்களுடைய கோரிக்கைகளுக்கு ஏற்றவாறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய அமைச்சர் கே.என்.நேரு, உங்களுடன் ஸ்டாலின் திட்டம் மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிச்சாமி நான்கு ஆண்டுகள் வெளியே வராமல் தற்போது தான் வெளியே வந்துள்ளார். உங்களுடன் ஸ்டாலின் திட்டம் தேர்தலுக்காக என கூறும் எடப்பாடி பழனிச்சாமி தற்போது வெளியே வந்துள்ளது தேர்தலுக்காக தான்.

மக்கள் ஐந்தாண்டுகள் எங்களுக்கு வாய்ப்பு வழங்கி உள்ளார்கள். ஐந்தாண்டுகளுக்குள்ளாக மக்களுக்கு தேவையானதை தொடர்ச்சியாக செய்து வருகிறோம் மக்களிடம் நல்ல ஆதரவு இருக்கிறது ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டத்தை மக்கள் யாரும் குறை கூறவில்லை.

உங்களுடன் ஸ்டாலின் திட்டமும், ஓரணியில் தமிழ்நாடும் மக்களிடம் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளதால் எடப்பாடி பழனிச்சாமிக்கு அச்சம் வந்துவிட்டது அதனால் இந்த திட்டங்களை அவர் விமர்சனம் செய்கிறார்.

எதிர்க்கட்சித் தலைவர் ஆன பின்பு அவர் மக்களை சந்திக்காமல் தற்போது அவர் வெளியே வந்துள்ளார் அவர் இந்த திட்டங்களை விமர்சிப்பது நியாயமா ?

வட மாநில மக்கள் இன்று இரு மொழி கொள்கைக்காக போராடுகிறார்கள். காங்கிரஸ் மத்தியில் ஆட்சி செய்த பொழுது திமுக அவர்களுடன் கூட்டணியில் இருந்தது தமிழ்நாட்டிற்கு தேவையானவற்றை தி.மு.க. அரசு கேட்டபோது அவற்றை காங்கிரஸ் அரசு செய்து கொடுத்தது ஆனால் அதிமுக பா.ஜ.க. கூட்டணியில் அ.தி.மு.க. தமிழ்நாட்டில் ஆட்சியில் இருந்த போது மத்தியில் ஆட்சியில் இருந்த பா.ஜ.க. தமிழ்நாட்டிற்கு தேவையான எதையும் செய்யவில்லை என்று கூறினார்.



கிருஷ்ணகிரி நகராட்சியில், ”உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் கிழக்கு மாவட்ட செயலாளர், மதியழகன் எம்.எல்.ஏ. நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.


